அறிக்கை அளிக்கக்கூடியது

இந்திய உச்ச நீதிமன்றம்

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு

குற்றவியல் மேல்முறையீடு எண் (கள்). 1025/2011

மதன் என்கிற மது படேகர் .....மேல்முறையீட்டாளர்(கள்)

எதிர்

மகாராஷ்டிர மாநில அரசு .....எதிர்மேல்முறையீட்டாளர்(கள்)

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. என்.வி. இரமணா

1. **இந்த மேல்முறையீடு, அமர்வு வழக்கு எண்** 91/1992-**இல் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரையை உறுதிசெய்து, குற்றவியல் மேல்முறையீடு எண்** 462/1992-**இல் பம்பாய் உயர் நீதிமன்றத்தின்** 2010-**ஆம் ஆண்டு ஜூன் மாதம்** 8-**ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையால் மனக்குறையுற்ற, மேல்முறையீட்டாளரால் சிறப்பு அனுமதியின் மூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

2. **அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கமாவது, குற்றம் சாட்டப்பட்டவரான இங்குள்ள மேல்முறையீட்டாளர் சம்பவ நாளுக்கு முன்னதாக கடந்த ஐந்து வருடங்களாக லதாபாயுடன் (மரணமுற்றவருடன்) தகாத உறவு வைத்திருந்தார் மற்றும்** 1991-**ஆம் ஆண்டு டிசம்பர்** 13 **அன்று மரணமுற்றவர், குற்றஞ்சாட்டப்பட்டவருக்காக உணவு சமைக்க மறுத்தபோது, அவர் எரிச்சலடைந்து, அவள்மீது மண்ணெண்ணெய் ஊற்றி, அவளை உயிருடன் எரித்துவிட்டார்.** மரணமுற்றவரின் அலறல் சத்தத்தைக் கேட்டு, மீராபாய் மற்றும் சத்யபாமாபாய் (அ.சா .7) அவரை காப்பற்ற விரைந்தனர்.மேல்முறையீட்டாளரும், தீயை அணைக்க அவர்களுடன்

சேர்ந்துகொண்டார்.அண்டை வீட்டினர் கூடியதை பார்த்து, அந்தப் பதற்ற நிலையில் குற்றஞ்சாட்டப்பட்டவர் சம்பவ இடத்திலிருந்து ஓடிவிட்டார்.அதன்பின், பாதிக்கப்பட்டவர், அண்டை வீட்டார்களால் நாசிக்கிலுள்ள உள்ளூர் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டார், அங்கு, மேல்முறையீட்டாளரும் அனுமதிக்கப்பட்டிருந்தார்.சிறப்பு நீதித்துறை நடுவரான ஜெயபிரகாஷ் சவான் (அ.சா .1), லதாபாயின் மரண வாக்குமூலத்தோடு மேல்முறையீட்டாளரின் வாக்குமூலத்தையும் பதிவு செய்தார்.அதே நாளன்று, அதாவது 14.12.1991 அன்று தலைமை காவலரான நிவ்ருட்டி பாபுராவ் கோத்ததேயும் (அ.சா .12), லதாபாயின் (மரணமுற்றவர்) மரண வாக்குமூலத்தைப் பதிவு செய்தார்.

3. **குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக காவல்துறை உதவி ஆய்வாளரான ஜாதவ் (அ.சா .11) -ஆல் குற்ற எண் 76/91 பதிவு செய்யப்பட்டது. அதன்பின் குற்றத்திற்குட்படுத்தும் பொருட்களான, மண்ணெண்ணெய் டப்பா, தீப்பெட்டி, புடவைத்துண்டுகள், இரவிக்கை போன்றவை குற்றம் நிகழ்ந்த இடத்திலிருந்து கைப்பற்றப்பட்டு, சாட்சிகளின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டு, சம்பவயிட பஞ்சநாமா தயாரிக்கப் பட்டது. 16.12.1991 அன்று பாதிக்கப்பட்ட லதாபாய் தீக்காயங்களால் இறந்துவிட்டார் மற்றும் குற்றஞ்சாட்டப் பட்டவர் 19.01.1992 அன்று கைது செய்யப்பட்டார். மேற்கொண்டு விசாரணையில் மரணமுற்றவரின் உடல்மீது சடலக் கூறாய்வு நடத்தப்பட்டு, வேதியியல் ஆய்வாளரின் அறிக்கை (சா.ஆ .32) பெறப்பட்டு, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு குற்ற அறிக்கையிடப் பட்டது.அவர் குற்றவாளி இல்லையென முறையிட்டதால் அறிவார்ந்த அமர்வு நீதிபதி முழுவீச்சான விசாரணையை நடத்தி, முடிவில் இ.த.ச., பிரிவு 302-இன் கீழான தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக குற்றஞ்சாட்டப்பட்டவர்/மேல்முறையீட்டாளர் ஆயுள் தண்டனை அனுபவிக்கவும், ரூ.100/-அபராதம் செலுத்தவும், தவறினால் மேலும் ஒரு மாத காலத்திற்கான சிறைத்தண்டனையைக் கூடுதலாக அனுபவிக்கவும் தீர்ப்பளித்திருந்தார்.**

4.மேல்முறையீட்டாளர்-குற்றஞ்சாட்டப்பட்டவர் உயர் நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு வாயிலாக வழக்கை எடுத்துச்சென்றார்.உயர் நீதிமன்றமானது, தீக்காயங்கள் மூலம் லதாபாயின் இயற்கைக்குமாறான மரணத்தை விளைவித்ததில் குற்றஞ்சாட்டப்பட்டவரின் உடந்தைமை குறித்து, நியாய மான சந்தேகத்திற்கு இடமின்றி வழக்கை அரசுத்தரப்பு மெய்ப்பித்துள்ளது என்ற முடிவிற்கு வந்துள்ளது. அதன்படி, உயர் நீதிமன்றம் மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்து, கற்றறிந்த கூடுதல் அமர்வு நீதிபதியால் விதிக்கப்பட்ட தீர்ப்பையும், தண்டனையையும் உறுதிசெய்தது. கீழமை நீதிமன்றத்தின் ஒருங்கியல்வான காண்முடிவுகளால் மனக்குறையுற்று, குற்றஞ்சாட்டப்பட்டவர்/மேல் முறையீட்டாளர், இந்த மேல்முறையீட்டில் எங்கள் முன் உள்ளார்.

5. இரு தரப்பினருடைய கற்றறிந்த வழக்குரைஞர்களின் வாதங்கள் கேட்கப்பட்டு, பதிவாவணத்திலுள்ள சான்றாதாரங்களை நாங்கள் பார்வையிட்டோம்.

6. மனுதாரர் மரணமுற்றவர்மீது மண்ணெண்ணெய் ஊற்றினார் என்ற பொருண்மையை அரசுத்தரப்பு நிலைநாட்ட இயலவில்லை என்று நீதிமன்றத்தை நம்பவைக்க மேல்முறையீட்டாளருக்காக ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் கடும் முயற்சி செய்துள்ளார். சம்பவத்திற்கு கண்ணுற்ற சாட்சியில்லை, உண்மையிலேயே, குற்றஞ்சாட்டப்பட்டவரும், மரணமுற்றவரை காப்பாற்றும் முயற்சியில் 40% தீக்காயங்களடைந்து பாதிக்கப்பட்டார்.சம்பவ தேதியன்று, மரணமுற்றவர் தன்னைத்தானே தீப்பற்றவைத்துக்கொண்டு அலறி கூக்குரலிட்டார். குற்றஞ்சாட்டப்பட்டவர், லதாபாயின் சத்தத்தைக்கேட்டு, அவளை காப்பாற்றுவதற்கு வீட்டினுள் குதித்து ஓடிச் சென்றார்.ஆனால், மரணமுற்றவர் குற்றஞ்சாட்டப் பட்டவரை பார்த்தபின்பு, அவரை கட்டித்தழுவியதில் அவரும் தீக்காயங்களடைந்தார்.சாட்டுரைக்கப்பட்ட மரண வாக்குமூலங்கள் மரணமுற்றவரால் தன்னிச்சையாக சொல்லப்பட்டவையல்ல.அவை மேல்முறை-யீட்டாளரை சிக்கவைக்க, ஒரு பொய் வழக்கை புனையும் உள்நோக்கத்துடன் புனையப்பட்டவை என்று கற்றறிந்த வழக்குரைஞர்

வாதிட்டார்.86% தீக்காயங்களுடன் பாதிக்கப்பட்டவர் எவ்வாறு மரண வாக்குமூலம் அளிக்கமுடியும் என்றும், உட்கருத்து மெய்ப்பிக்கப்பட்டுள்ளதா?என்றும், மேலும், குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றமானது சந்தேகத்திற் கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?போன்ற பல்வேறு சந்தேகங்கள் அரசுத்தரப்பு வழக்கிலிருப்பினும், கீழமை நீதிமன்றங்கள் சரியானமுறையில் வழக்கை உணராமல், குற்றஞ்சாட்டப்பட்டவர்-மேல் முறையீட்டாளருக்கு எதிராக குற்றவாளியென தீர்மானித்த உத்தரவானது நெறிபிறழ்ந்தது, அது நீக்கறவு செய்யப்படவேண்டும் என அவர் வேண்டுரைத்தார்.

7. **அதற்கு மாறாக, மரணவாக்குமூலமே குற்றவாளியென தீர்மானிப்பதற்கான அடிப்படை யாகுமென அரசின் சார்பாக ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைத்தார்.அரசுத்தரப்பு, உறுதியான மற்றும் நம்பத்தக்க சான்றினை அளித்து, குற்றஞ்சாட்டப் பட்டவரின் குற்றத்தை, சந்தேகத்திற் கிடமின்றி மெய்ப்பித்துள்ளது.எனவே, மேல்முறையீட்டின் கீழான உத்தரவுக்கு, இந்த நீதிமன்றத்திடமிருந்து ஏதொரு தலையீடும் தேவையில்லை.**

8. **இரு தரப்பினரின் கற்றறிந்த வழக்குரைஞர்களால் முன்வைக்கப்பட்ட பணிந்துரைகளை நாங்கள் பரிசீலனை செய்தும், பதிவாவணத்திலுள்ள சான்றாதாரங்களை ஆராய்ந்தும், சிறப்பு செயலாட்சி நடுவராலும் (பிற்சேர்க்கை பி -1), அ.சா. 12-தலைமை காவலராலும் (பிற்சேர்க்கை பி-3) முறையே பதிவு செய்யப்பட்டவையும், மருத்துவரால் உரிய முறையில் சான்றிடப்பட்டவையுமான மரணமுற்றவரின் இரண்டு மரண வாக்குமூலங்களையும் மிகக் கூர்மையாக பரிசீலித்தப் பிறகே, கீழமை நீதிமன்றங்கள் ஒருங்கியல்வான முடிவிற்கு வந்துள்ளன என்பது எங்களது கருத்தாகும். மரணமுற்றவர் சம்பவ தேதியன்று, அதாவது முந்தைய இரவன்று, உணவு சமைப்பது தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டவருடன் சண்டையிட்டார் என்றும், எரிச்சலுற்ற மேல்முறை யீட்டாளர் மண்ணெண்ணெயை ஊற்றி தீப்பெட்டியைக் கொண்டு அவள்மீது தீ வைத்துவிட்டார் என்பது இரண்டு மரண வாக்குமூலங்களிலிருந்து தெளிவாகிறது. குற்றஞ்சாட்டப்பட்டவர்-**

மேல்முறையீட்டாளர் அப்பெண்ணின்மீது தீ வைத்ததில், அவளது மரணத்தில் முடிவுற்ற, அவருடைய குற்றத்தை தெரிவிக்கின்ற, இரண்டு மரண வாக்குமூலங்களும் ஒருமித்த, தெளிவான சொற்பாங்கில் உள்ளன.மரண வாக்குமூலங்கள் தன்னிச்சையாகக் கொடுக்கப்பட்டவையல்ல என்ற வாதத்திற்கு, சிறப்பு செயலாட்சி நடுவர், மருத்துவரிடம் இருந்து உரிய அனுமதியை பெற்றபிறகு, சட்டத்திற்கிணங்க மரண வாக்குமூலத்தைப் பதிவு செய்துள்ளார் என்ற காரணத்திற்காக மதிப்பு அளிக்கப்பட்ட இயலாது.குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தை வெளிப்படுத்தும் செய்திகள் மற்றும் கூறுகள் தொடர்பாக, காவலரால் பதிவு செய்யப்பட்ட மற்றொரு மரண வாக்குமூலமும் ஒத்திருக்கிறது.

9. கையிலிருக்கக்கூடிய வழக்கை நாம் ஆய்வு செய்யும்முன், மரண வாக்குமூலத்தின் ஒரு சில அம்சங்களைக் குறிப்பிடுவது முக்கியமாகும். நாங்கள், இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவுகள் 6, 7 மற்றும் 32-இன் கீழ் மரண வாக்குமூலத்தின் ஏற்புகையை பின்பற்றலாம் என்றாலும், மரண வாக்குமூலம் என்ற அம்சத்தின்பேரில் மிக முக்கிய மான தீர்வழிச் சட்டமாக கருதப்படுகின்ற, கிங் -எதிர்-உட்காக், (1789) 168 இ.ஆர். 352 என்ற வழக்கை மரண வாக்குமூலத்தின் ஏற்புகை விதிக்கு பின்பற்றலாம்.அவ்வழக்கில் உள்ள மரணமுற்றவர் (சில்வியா) தனக்கு என்ன நேர்ந்தது என்பது குறித்து அளித்த மரண வாக்குமூலம் சில்வியாவிடமிருந்து பெறப்பட்ட சான்றாகும். "தரப்பினர் மரணத்தறுவாயில் இருக்கிறபோது, இவ்வுலகில் இருக்கும் ஒவ்வொரு நம்பிக்கையும் விட்டுச்செல்கிறபோது, பொய்மை உட்கருத்து ஒவ்வொன்றும் அமைதியடைந்து, மனம், உண்மையைக் கூறும் மிக சக்திவாய்ந்த சிந்தனைகளால் தூண்டப் படுகிறபோதான இறுதிநிலையில் சொல்லப்படும் " மரண வாக்குமூலத்தின் பயன்பாட்டு முறையையும், முக்கியத்துவத்தையும் அதிலுள்ள நீதிமன்றம் ஆணித்தரமானவகையில் சரியென மெய்ப்பித்திருந்தது. 'மிகவும் பயபக்தியுடனும், மிகவும் அச்சத்துடனு மானதொரு நிலையானது, நீதிமன்றத்தில் செயற்படுத்தப்படும் ஆக்கப்பூர்வமான ஆணை உறுதிமொழிமூலம் விதிக்கப்படுகின்றதற்கு சமமானதொரு கடமையை

உருவாக்குகின்ற சட்டத்தால் பரிசீலிக்கப்படுகிறது " என நீதிமன்றம் மேலும் தீர்ப்பளித்தது.

10. **மரண வாக்குமூலத்தின் ஏற்புகை விதியானது, முடிவுபெறா தகராறாக ஒரு போதும் இல்லை. ஒரு குற்ற வழக்கின் தீர்ப்பில், மரண வாக்குமூலம் மிக முக்கியமான பங்காற்றுகிறது.** இறப்புக்குரிய காரணம் கேள்விக்குரியதாக வரும் வழக்குகளில் ஒரு நபரால், தனது (ஆண்/பெண்) இறப்பு குறித்தோ அல்லது தனது (ஆண்/பெண்) இறப்பிற்கு காரணமான ஏதேனும் சூழ்நிலைகள் குறித்தோ, கொடுக்கப்படும் மரண வாக்குமூலமானது, சாட்சிய சட்டத்தின் பிரிவு 32-இன் கீழ் தொடர்புடையதாகிறது, மரண வாக்குமூலம் என்பது கேள்விநிலைச் சான்றின் ஏற்புகைக்கு எதிரான விதிக்கு ஒரு விதிவிலக்காகும் என்பது பலமுறை வலியுறுத்தப் பட்டுள்ளது.கேள்விநிலை விதிக்கு விதிவிலக்காக உள்ள மரண வாக்குமூலம் என்ற கருத்தின் முழுமையான செயல்விளக்கமானது, அனுமதிக்கத்தக்க அல்லது அனுமதிக்கத்தகாத ஒருசில சான்றுவகைகளை தீர்மானித்தல் என்றும், அது மரபு வழி நோக்கின் அடிப்படையிலானதேயன்றி அளிக்கப்பட்ட குறிப்பிட்ட சான்றின் வெளிப்படையான நம்பகத்தன்மையின் அடிப்படையிலானதன்று.

11. **மரணத்தை நெருங்கும்போது ஏற்படும் உடல்ரீதியான மற்றும் மனரீதியான பலகீனத்தை தொடர்ந்து, தன்னுடைய கொள்கையை நிலைநாட்டும் விருப்பம் அல்லது ஒரு தவறுக்கான பொறுப்பை வேறொருவருக்கு குறித்துரைக்கும் மனநிலை என்ற பொருண்மையையும், குற்றஞ்சாட்டப்பட்டவர் இல்லாதபோது வாக்குமூலங்கள் அளிக்கப்படுகின்றன என்ற பொருண்மையையும், மேலும் முதன்மையான கேள்விகளுக்கும், நேரடியான கருத்துரைகளுக்கும் அவ்வப்போது பதிலளித்தலும் குறுக்கு விசாரணைக்கான வாய்ப்பு இல்லாமலும், என்பனபோன்ற இப்பரிசீலனைகள் அனைத்தும் அத்தகைய வாக்குமூலங்கள் ஒரு அபாயகரமான சான்றின் வகையாக முன்வைப்பதற்கு ஒத்திசைகின்றன என்பதை நாங்கள் அறிகிறோம். அத்தகைய தொடர்புடையவற்றைச் செம்மைப்படுத்தும் பொருட்டு, இந்த நீதிமன்றமானது, மரண வாக்குமூலத்தை மட்டுமே அடிப்படையாகக்கொண்ட குற்றத்தின் தீர்ப்பை பரிசீலிக்கிறபோது, முன்னெச்சரிக்கையான அணுகுமுறையைக் கொண்டிருப்பதற்கு பல**

எண்ணிக்கையிலான வழக்குகளில் எச்சரித்துள்ளது. மரண வாக்குமூலமானது உறுதியூட்டப்பட்டாலன்றி, அதை குற்றத்தின் தீர்ப்புக்கான அடிப்படையாக அமைக்க இயலாது என்ற முழுமையான சட்டவிதி ஏதும் இல்லையென்றாலும், நீதிமன்றங்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் மற்றும் அது நீதிமன்றத்தின் சிந்தனையில் நம்பிக்கையூட்டுமெனினும், அதன்மீது சார்ந்திருக்கப்படவேண்டும்.(பார்க்க: **இராம் பிஉறாரி யாதவ் -எதிர்-பீகார் மாநில அரசு மற்றும் பலர்,** (1998) 4 எஸ்.சி.சி. 517:(ஏ.ஐ.ஆர்.1998 எஸ்.சி. 1850) மற்றும் **சுரேஷ் சந்திர ஜனா மற்றும் பலர் -எதிர்-மேற்கு வங்க மாநில அரசு மற்றும் பலர்** 2017 (8) ஸ்கேல் 697].

12. **மேலும், மரணமுற்றவர் மரண வாக்குமூலம் அளிக்கும் சமயத்தில், தகுதியான மனநிலையிலிருந்தார் என்றும், சொல்லிக்கொடுத்தலோ அல்லது தூண்டுதலோ இல்லையென நீதிமன்றத்தின் கருத்தில் அது நம்பிக்கையூட்டுமாயின், அத்தகைய வாக்குமூலம் குற்றத்தின் தீர்ப்புக்கான அடிப்படையாக அமையலாம் என இந்நீதிமன்றம் உறுதியாக வகுத்துரைத்துள்ளது. மரண வாக்குமூலத்தின் சரித்தன்மை மற்றும் உண்மைத்தன்மை தொடர்பான ஐயப்பாடு ஏதும், நீதிமன்றத்தில் உருவாக்கப்படுமெனில், உறுதியூட்டும் சாட்சியம் ஏதுமின்றி அதன்மீது செயலாற்றப்படக்கூடாது. மேலும் பார்க்க:அத்பீர் -எதிர்- தேசிய தலைநகரமான டெல்லி அரசு** 2010 (9) **எஸ்.சி.சி.** 1:(**ஏ.ஐ.ஆர்.2010 எஸ்.சி.** 3477), **பானிபென் எதிர்-குஜராத் மாநில அரசு**, 1992 (2) **எஸ்.சி.சி.** 474:(**ஏ.ஐ.ஆர்.1992 எஸ்.சி.** 1817) **மற்றும் பன்னீர்செல்வம் -எதிர்-தமிழ்நாடு மாநில அரசு**, 2008 (17) **எஸ்.சி.சி.** 190:(2008 **ஏ.ஐ.ஆர். எஸ்.சி.டபிள்யூ.**4787)].

13. **வழக்குப் பொருண்மையின் கருப்பொருளுக்கு அறுதியிடப்பட்ட சட்டநிலையைப் பயன்படுத்தி, பணி மருத்துவ அலுவலரால் நோயாளியின் நிலைமை பரிசோதிக்கப்பட்டு, தகுதிச் சான்றிதழ் வழங்கப்பட்டு, அதைப் பெற்றுக்கொண்டபிறகு, சிறப்பு செயலாட்சி நடுவரால் (அ.சா** .1) 14.12.1991 **அன்று மரணமுற்றவரின் மரண வாக்குமூலம் (சா.ஆ.**10) **பதிவு செய்யப்பட்டது.** மரணமுற்றவர் சம்பவத்தை விவரித்து, குற்றஞ்சாட்டப் பட்டவரின் பெயரை தெளிவான மற்றும் உறுதியான சொற்பாங்கில்

குற்றவாளியென உரைத்துள்ளதால் மரண வாக்குமூலத்தின் உண்மைத்தன்மைமீது ஐயப்பாடு கொள்ளமுடியாது. தற்போதைய வழக்கில் மரணமுற்றவருடைய வாக்குமூலமானது குற்றம் சாட்டப்பட்டவர், மேல்முறையீட்டாளரை குற்றவாளி என தீர்மானிப்பதற்கான ஒரே அடிப்படையாக அமையலாம் எனக் கூற நாங்கள் தயக்கங்காட்டவில்லை.

14. **இச்சூழ்நிலையின்கீழ், சில அரசுத்தரப்பு சாட்சிகள் பிறழ்சாட்சிகளாக மாறியும், அரசுத்தரப்பு வழக்கில் சிறிய முரண்பாடுகள் இருந்தும், கீழமை நீதிமன்றங்கள் ஒவ்வொ ரு சூழ்நிலையையும் முழுமையாக மதிப்பிட்டு, பொருண்மைகளைக் கவனமாக ஆராய்ந்தபிறகுதான், தங்களுடைய ஒருங்கியல்வான காண்முடிவுகளை பதிவு செய்துள்ளன என்ற சாதாரண காரணத்திற்காக இவ்வழக்கின் முடிவின் மீதான விளைவு எதனையும் அவை பாதிக்காது. பர்வாதா போகின்பாய் உறிர்ஜிபாய் -எதிர்-குஜராத் மாநில அரசு** (1983) 3 **எஸ்.சி.சி.** 217:(**ஏ.ஐ.ஆர்.**1983 **எஸ்.சி.** 753) -**இல் இந்நீதிமன்றத்தால் கருத்தறிவிக்கப்பட்டவாறு, ஒரு பொருண்மையின் ஒருங்கியல்வான காண்முடிவானது,** (1) எந்தச் சான்றின் மீதும் அக்காண்முடிவு அடிப்படையானதன்று என்றோ அல்லது (2) சான்றினை அதன் முகமதிப்பிலேயே எடுத்துக்கொண்டாலுங்கூட, எந்தவொரு நியாய மான நபரும், காண்முடிவு முரணானதாக இருக்கின்ற அத்தகையதான முடிவினை எட்டமாட்டார் என்றோ அல்லது (3) காண்முடிவு, ஏற்கத்தகாத சான்றின் அடிப்படையிலமைந்து, அச்சான்று, பார்வையிலிருந்து விலக்கப்பட்டால், அது அரசுத்தரப்பு வழக்கை மறுக்கவோ அல்லது கணிசமான அளவில் அவப்பெயர் ஏற்படுத்தவோ அல்லது ஊறுபடுத்தவோ செய்யும் என்றோ அல்லது (4) குற்றவாளிக்கு ஆதரவாக துலாக்கோலை சாய்க்கக்கூடிய சில முக்கியமான சான்றின் பகுதி புறக்கணிக்கப்பட்டுள்ளது என்றோ, கவனிக்கப்படாமலிருந்துள்ளது என்றோ அல்லது தவறுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றோ நிலைநாட்டப் பட்டாலன்றி, சிறப்பு அனுமதி மூலமான மேல்முறையீடு ஒன்றில் அதை மீண்டும் எடுக்கமுடியாது.

15. **அப்படியிருக்க, கையில் இருக்கக்கூடிய வழக்கு குறிப்பாக, அ.சா. 1 மற்றும் 12-இன் சாட்சியங்கள் குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தின் தீர்ப்புக்கான அடிப்படையாக அமைந்த மரண வாக்குமூலத்தில்** (சா.ஆ .10), **தனது மேற்குறிப்பை உறுதி செய்தவரான அ.சா** .8 (**மருத்துவர் கோத்கர்**) -**இன் சாட்சியத்துடன் உறுதியூட்டப்படுகிறபோது, மேற்குறிப்பிடப்பட்ட எந்த வகைகளின்கீழும் வராது** அத்தகைய சூழ்நிலைகளில், விசாரணை நீதிமன்றத்தோடு உயர் நீதிமன்றத்தால் அடையப்பெற்ற முடிவு நெறிபிறழ்ந்திருப்பதாக நாங்கள் கண்டறியவில்லை. அ.சா.1 மற்றும் 12-ஆல் பதிவு செய்யப்பட்ட மரண வாக்குமூலங்கள் எந்தக் குறைப்பாட்டாலும் பாதிப்புறவில்லை என்பதாலும், அவை நம்பிக்கையூட்டுகின் என்பதாலும், குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றம் சந்தேகத்திற் கிடமின்றி மெய்ப்பிக்கப்பட்டுள்ளது என்ற நேர்மையான கருத்தை கீழமை நீதிமன்றங்கள் கொண்டுள்ளன. எனவே, முன்கூறப்பட்ட அனைத்து காரணங்களுக்காக, கீழமை நீதிமன்றங்களால் பதிவு செய்யப்பட்ட பொருண்மையின் ஒருங்கியல்வான காண்முடிவுகளில் எங்களது தலையீட்டைக் கோருகின்ற காரணம் எதையும் நாங்கள் காணவில்லை. ஆகையால், மேல்முறையீடு தோல்வியுற்று, தள்ளுபடி செய்யப்படுவதற்குரியதாகிறது.

16. **முடிவில், மேல்முறையீட்டாளருக்காக ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர், மேல்முறையீட்டாளர் கல்-நெஞ்சம் கொண்ட குற்றவாளி அல்லர், அவர், மனைவி மற்றும் குழந்தைகளுடைய ஏழை கட்டுமானத் தொழிலாளி, மேலும்** 40% **தீக்காயங்கள் அடைந்துள்ளார் என்ற பணிந்துரையை முன்வைத்தார்.** ஆகவே, தண்டனைக் குறைப்புக்காக மேல்முறை யீட்டாளரின் வழக்கு, அரசால் பரிவுடன் பரிசீலிக்கப் படலாம் என அவர் நீதிமன்றத்தை வேண்டினார்.எங்களது கருத்தில், மேல்முறையீட்டாளரின் முறையீட்டை பரிசீலிக்கலாமா, வேண்டாமா என்பது அரசைச் சார்ந்தது.ஆனால், இந்நிலையில் நாங்கள் அந்த மதிப்பில் மேல்முறையீட்டாளருக்கு எந்த பரிகாரத்தையும் வழங்க இயலாது.

17. **அதன்படி, மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது.**

……..மாண்புமிகு நீதியரசர் திரு. என்.வி. இரமணா

…….மாண்புமிகு நீதியரசர் திரு. எஸ். அப்துல் நசீர்

புதுதில்லி,

06.02.2018.

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."